## நவம்பர் – 21 – செவ்வாய்

### தூய கன்னி மரியாவை காணிக்கையாக ஒப்படைத்தல்

### “இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்திருக்கிறார்” லூக் 19:10

**முதல் வாசகம் : 2 மக்கபே 6: 18 - 31**

தலைசிறந்த மறைநூல் அறிஞர்களுள் ஒருவரும் வயதில் முதிர்ந்தவரும் மாண்புறு தோற்றம் உடைய வருமான எலயாசர் பன்றி இறைச்சி உண்ணத் தம் வாயைத் திறக்கமாறு கட்டாயப் படுத்தப்பட்டார். ஆனால் அவர் மாசுபடிந்தவராய் வாழ்வதை விட மதிப்புடையவராய் இறப்பதைத் தேர்ந்து கொண்டு இறைச்சியை வெளியே துப்பிவிட்டுத் தாமாகவே சித்திரவதைக் கருவியை நோக்கிச் சென்றார். உயிர்மேல் ஆசை இருப்பினும், திருச்சட்டம் விலக்கியிருந்த பண்டங்களைச் சுவைத்தும் பாராமல் தள்ளிவிடத் துணியும் எல்லாரும் இவ்வாறே செய்யவேண்டும். சட்டத்திற்கு எதிரான அந்தப் பலிவிருந்துக்குப் பொறுப்பாய் இருந்தவர்கள் அவரோடு கொண்டிருந்த நீண்டகாலப் பழக்கம் காரணமாக அவரை ஒதுக்கமாக அழைத்துச் சென்று, அவர் உண்ணக்கூடிய இறைச்சியை அவரே தயாரித்துக் கொண்டு வருமாறும், மன்னன் கட்டளையிட்டபடி பலியிடப்பட்ட இறைச்சியை உண்பதுபோல நடிக்குமாறும் அவரைத் தனிமையில் வேண்டிக் கொண்டார்கள். இவ்வாறு செய்வதால் அவர் சாவினின்று காப்பாற்றப்படுவார் என்றும், அவரோடு அவர்கள் கொண்டிருந்த பழைய நட்பின் காரணமாக மனிதநேயத்தோடு நடத்தப்படுவார் என்றும் அவர்கள் எண்ணினார்கள். ஆனால் எலயாசர் தமது வயதுக்குரிய தகுதிக்கும் முதுமைக்குரிய மேன்மைக்கும் நரை முடிக்குரிய மாண்புக்கும் சிறு வயதுமுதல் தாம் நடத்தியிருந்த மாசற்ற வாழ்க்கைக்கும் கடவுள் கொடுத்திருந்த திருச்சட்டத் திற்கும் ஏற்றபடி மேலான முறையில் உறுதி பூண்டவராய், உடனே தமது முடிவைத் தெரிவித்துத் தம்மைக் கொன்றுவிடுமாறு கூறினார். அவர் தொடர்ந்து, ”இவ்வாறு நடிப்பது எனது வயதுக்கு ஏற்றதல்ல ஏனெனில் தொண்ணூறு வயதான எலயாசர் அன்னியருடைய மறையை ஏற்றுக் கொண்டுவிட்டார் என இளைஞருள் பலர் எண்ணக்கூடும். குறுகிய, நிலையில்லாத வாழ்வுக்காக நான் இவ்வாறு நடிப்பேனாகில் என் பொருட்டு அவர்கள் நெறி பிறழ நேரிடும் அவ்வாறு நேரிட்டால் அது என் முதுமையை நானே களங்கப்படுத்துவதும் இழிவுபடுத்துவதுமாகும்.. மனிதரின் தண்டனையினின்று நான் தற்காலிகமாக விடுபட்டாலும், உயிரோடு வாழ்ந்தாலும் இறந்தாலும், நான் எல்லாம் வல்லவருடைய கைக்குத் தப்ப முடியாது. ஆகவே இப்போது என் உயிரை ஆண்மையுடன் கையளிப்பதன் மூலம் என் முதுமைக்கு நான் தகுதியுடையவன் என மெய்ப்பிப்பேன் மதிப்புக்குரிய, தூய சட்டங் களுக்காக விருப்போடும் பெருந்தன்மையோடும் எவ்வாறு இறப்பது என்பதற்கு ஓர் உயரிய எடுத்துக்காட்டை விட்டுச்செல்வேன்” என்றார். இதெல்லாம் கூறி முடித்ததும் அவர் சித்திரவதைக் கருவியை நோக்கிச் சென்றார். சற்றுமுன் அவரைக் கனிவோடு நடத்தியவர்கள் இப்போது கல்நெஞ்சராய் மாறினார்கள் ஏனெனில் அவர் கூறியது அவர்களுக்கு மடமையாகத் தோன்றியது. அடிபட்டதால் இறக்கும் தறுவாயில் இருந்தபோது அவர் அழுது புலம்பி, ”நான் சாவினின்று விடுவிக்கப்பட்டிருக்கலாம் என்றாலும், அடியினால் என் உடலில் ஏற்படும் கொடிய துன்பங்களைத் தாங்கிக்கொள்கிறேன் ஆண்டவருக்கு நான் அஞ்சுவதால் என் உள்ளத்தில் மகிழ்ச்சியோடு இவற்றை ஏற்றுக்கொள்கிறேன் ஆண்டவர் தம் தூய ஞானத்தால் இவற்றையெல்லாம் அறிகிறார்” என்றார். இவ்வாறு எலயாசர் உயிர்துறந்தார். அவருடைய இறப்பு இளைஞர்களுக்கு மட்டுமல்ல, அவருடைய நாட்டு மக்கள் அனைவருக்குமே சான்றாண்மைக்கு எடுத்துக்காட்டாகவும் நற்பண் புக்கு அடையாளமாகவும் விளங்கியது.

**பதில்பாடல் :** ஆண்டவரே எனக்கு ஆதரவு

**நற்செய்தி : லூக்கா 19 : 1 - 10**

அக்காலத்தில் இயேசு எரிகோவுக்குச் சென்று அந்நகர் வழியே போய்க் கொண்டிருந்தார். அங்கு சக்கேயு என்னும் பெயருடைய செல்வர் ஒருவர் இருந்தார். அவர் வரிதண்டுவோருக்குத் தலைவர். இயேசு யார் என்று அவர் பார்க்க விரும்பினார் மக்கள் திரளாய்க் கூடியிருந்தால் அவரைப் பார்க்க முடியவில்லை. ஏனெனில், சக்கேயு குட்டையாய் இருந்தார். அவர் முன்னே ஓடிப்போய், அவரைப் பார்ப்பதற்காக ஒரு காட்டு அத்தி மரத்தில் ஏறிக் கொண்டார். இயேசு அவ்வழியேதான் வரவிருந்தார். இயேசு அந்த இடத்திற்கு வந்தவுடன், அண்ணாந்து பார்த்து அவரிடம், ”சக்கேயு, விரைவாய் இறங்கிவாரும் இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்” என்றார். அவர் விரைவாய் இறங்கி வந்து மகிழ்ச்சி யோடு அவரை வரவேற்றார். இதைக் கண்ட யாவரும், ”பாவியிடம் தங்கப்போயிருக்கிறாரே இவர்” என்று முணுமுணுத்தனர். சக்கேயு எழுந்து நின்று, ”ஆண்டவரே, என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுகிறேன் எவர் மீதாவது பொய்க் குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்” என்று அவரிடம் கூறினார். இயேசு அவரை நோக்கி, ”இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று. ஏனெனில் இவரும் ஆபிரகாமின் மகனே! இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்திருக்கிறார்” என்று சொன்னார்.

**தியானம்:** பாவிகளை தேடி வந்தவர் யேசு. அதனால்தான் ஊர் மக்களால் ஒதுக்கப்பட்ட சக்கேயுவை அழைத்து அவருடன் பந்தி அமர்ந்தார். அது சக்கேயுவின் வாழ்வை மாற்றியதை இன்றைய நற் செய்தியில் நாம் பார்க்கலாம். யேசு நினைத்திருந்தால் சுகபோகங்களை அனுபவித்திருக்கலாம். ஆனால் தமது பணி என்ன என்பதனையும், தந்தையின் விருப்பம் என்ன என்பதனையும் நன்கு அறிந்தவராக தம்மை முழுமையாக கல்வாரியில் பலியிட்டார். அவர் செய்த அதே காரியத்தை எலயாசர் செய்வதை இன்றைய முதல் வாசகத்தில் நாம் காணலாம். எலயாசர் நினைத்திருந்தால் தமது மரணத்தில் இருந்து தப்பி இருக்கலாம், ஆனால் தமது இளம் சந்ததிக்கு தான் ஒரு உதாரணமாக இருக்க விரும்பினார். அதனால் சித்திர வதை செய்யப்பட்டு கொல்லப்பட்டார். இன்று நாட்டை ஆளும் பல தலைவர்கள் தமது வாழ்வையும், தமது குடும்ப அங்கத்தவர்களின் வாழ்வையும் மட்டுமே உயர்த்துகிறார்கள். நாட்டு மக்களைப் பற்றி அவர்களுக்கு கவலை இல்லை. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில்தான் ஊழல் என்று நினைத்தோம். ஆனால் இன்று மொன்றியலில் பல மேயர்கள் ஊழல் செய்ததற்காக தண்டிக்கப் படுவதை பார்க்கும்போது ஊழல் எல்லா இடமும் உள்ளது என்றே நினைக்கத் தோன்றுகிறது. இவ்வாறு ஆளுபவர்கள் ஊழல் செய்தால் நாட்டு மக்களின் நிலை என்ன? ஒரு காலத்தில் திருச்சபையின் பங்களிப்பு நாட்டை ஆழுவதில், அதிகாரம் செய்வதில் முக்கிய பங்கு வகித்தது. ஆனால் இன்று? இப்போதைய பாப்பரசர் அனைவரையும் அணைத்து செல்வதால் மிகச்சிறந்த பாபரசர்களில் ஒருவராக அவரை பார்க்கிறார்கள். எனவே நாட்டை ஆழ்வோரும், திருச்சபையை வழிநடத்துவோரும், சமுதாய தலைவர்களும் முன் மாதிரியான வாழ்வு வாழ வேண்டுமென்று மன்றாடுவோம்.